368

o. M. 1630. SEPTEMBER 1922.

சுயம்பிரகாசத்துணை

# ஞானசூரியன்

இது ஒரு சிறந்த யதார்த்த தமிழ்ப் பத்திரிகை.

# GNANA SURIYAN

A HIGH CLASS TAMIL MONTHLY.


| மலர் 1 | துந்துபிஞு புரட்டாசிமீ 1உ<br>1922ஞு செப்டம்பர்மீ 17உ | இதழ் 6 |
|---|---|---|

Vol. I — No. 6


பொருளடக்கம்.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| கடவுள் வணக்கம் | 121 |
| சுயராச்சியம்—பத்திராதிபர் | 124 |
| பிஸ்மிலின் சிறப்பு—மணிமுத்துநாயகம் | 126 |
| கடவுளியல்—வேதாந்தபாஸ்கரன் | 131 |
| குண்டலிசத்தி—வேதாந்தபாஸ்கரன் 2-ம் பாகம் | 134 |
| உயிர்ப்பிராணிகள் மகாநாடு—காரைச்சிவனடியார் பிரசுரம் | 139 |
| தமிழ்—R. S. சாம்பசிவசர்மன் | 141 |
| வருணதருமவிளக்கம்—விளமல் சேஷாத்திரி | 143 |


இப்பத்திரிகையிலுள்ள விஷயங்களை பத்திராதிபர் அநுமதியின்றி எவரும் பிரசுரிக்க அருகரல்லர்.

## "ஞான சூரியன்"

### சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, பர்மா, சிலோன்முதலிய இடங்களுக்கு | வருடம் 1-க்கு தபால்கூலி உள்பட | ரூ 1—8—0 |
| பிணங்கு, சிங்கப்பூர் முதலிய வெளி நாடுகளுக்கு | | ரூ 2—0—0 |
| தனி சஞ்சிகை விலை | | ரூ 0—3—0 |

மாதிரிப் பிரதி வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் உடனே இனமாக அனுப்பப்படும்

சந்தாதாரர்கள் சந்தா நம்பரைக்குறித்து எழுதினாலன்றி கடிதங்களுக்கு விடை யளிக்கப்படமாட்டாது.

சந்தாதாரராய்ச் சேரவிரும்புவோர் வி. பி. யிலனுப்பும்படி ஆர்டர்செய்யலாமேனும் முன் பணம் அனுப்பி விடுவதே உத்தமம். ஏனெனில் மணியார்டர் செய்தால் ரூ. 1—8—0. வி. பி. யில் ரூ. 1—11—0 ஆகும். அதனால் தங்களுக்கு 3 அணா சகாயமிருக்கிறது. முதல் சஞ்சிகையிலிருந்து விஷயங்கள் தொடர்ச்சியாய் எழுதப்பட்டுவருவதால் யாவரும் ஆரம்பத்திலிருந்தே சேர்ந்து வருகிறார்கள். சந்தா தொகை ரூ. 1—8—0 சித்திரை-மீ முதல்கொண்டு பங்குனி-மீ வரையில் கணக்கு வைத்துக்கொள்ளப்படும். இடையில் சந்தாதாரராய்ச் சேருபவர்களுக்கு சித்திரைமாதப் பத்திரிகைமுதல் சேர்த்து அனுப்பப்படும்.

---

### விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு | ஒருமாசத்திற்கு ... | ரூபா | 8—0—0 |
| அரை பக்கத்திற்கு | ,, | ,, | 5—0—0 |
| கால் பக்கத்திற்கு | ,, | ,, | 3—0—0 |

மொத்தமாய் ஒரு வருடத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டால் மொத்தத் தொகையில் 100-க்கு $12\frac{1}{2}$ ரூ வீதம் கழித்து வாங்கப்படும். எப்போதும் முழுதொகையை முன்பணமாயனுப்பவேண்டும்,

---

### விஷயங்கள்.

1. கடிதக்காரர்கள் அபிப்பிராயங்களுக்கு பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

2. விஷயம் அனுப்புவோர் கடிதத்தின் ஒரே பக்கத்தில் இங்கியால் தெளிவாய் எழுதியனுப்பினாலன்றி, அவ்விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா.

3. விஷயங்களை திருத்தவும், அவற்றில் கூட்டவும், குறைக்கவும், அவற்றை வெளியிடவும் வெளியிடாமலே விட்டுவிடவும் பத்திரிகாசிரியருக்கு பூரண சுதந்திரமுண்டு,

பத்திராதிபர்.

ஸ்ரீ கருணையானந்த மஸ்தான் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியதும் மனிதராகப்பிறந்த ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்கவேண்டிய யோக ஞான வசனசாஸ்திரமுமாகிய யோகாரகசியம்

முழுப்புத்தகம் 1-க்கு ரூ 2—0—0.

கருணையானந்த மஸ்தான் சுவாமிகள்
பத்திராதிபர், ஞானசூரியன் ஆபீஸ்,
விஜயபுரம், திருவாரூர்.

சுயம்பிரகாசத்துணை.

# ஞானசூரியன்.

இது ஒரு சிறந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தற்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (தமிழ் வேதம்)

(All Rights Reserved.)

மலர் 1.] துந்துபிஞு புரட்டாசிமீ 1உ. [இதழ் 6.

## கடவுள் வணக்கம்.

தேனெனத் தமிழ்சொல் கருணையானந்த
தேசிக வுட்சிதா காய
ஞானசூ ரியன்வந் துதித்தொளி விரிப்பு
நானிலத் துதித்தமா னிடர்கள்
நானெனு மகந்தைக் காரிருட் படலம்
நலிந்தவ ருளமலர் விரியச்
சோனைபோ லருள்செய் சுயம்பிர காசச்
சோதியைப் போதெலாந் தொழுவாம்.

(பத்திரிகாசிரியர்.)

உணர்ந்துதற் பரமா யுரைக்கஙோ சரமாய்
உயிர்க்குயி ரானசா கரமாய்
இணங்குசிற் பரமா யணுக்கடா பரமாய்
ஏகமா கியபரா பரமாய்
வணங்கிக பரமாய்க் கிளைத்த நூறுமுகம்
மதுகிளை விளக்கொளி கொழிக்குங்
குணங்குடி வாழும் முகியித்தீ னெமென்
குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வாம்.

(குணங்குடி மஸ்தான்)

# ஞானசூரியன்.

துந்துபிவூ புரட்டாசிமீ 1௳.

---

## சுயராச்சியம்.

காய்த லுவத்த லகற்றி ஒருபொருட்கண்
ஆய்த லறிவுடையோர் கண்ணதே—காய்வதனால்
உற்ற குணந்தோன்றா தாகும் உவப்பதன்கண்
குற்றமுந் தோன்றாக் கெடும்.

சுயம் என்றால் சொந்தம் என்றும் "ராச்சியம்" என்றால் ஆளுகை அல்லது "ஆட்சி" "அரசு செல்லுமிடம்" என்றும் பொருள். இதனால் "சுயராச்சியம்" என்னும் பதத்திற்குச் "சொந்த ஆளுகை" என்று விளங்கும். ஆட்சியில் சுயஆட்சி என ஒன்று ஏற்பட்டால் அந்நிய ஆட்சி ஒன்று இருப்பதாக அதனுள் பொருள்தொக்கி நிற்கின்றது. அகம் புறம் என ஒவ்வொன்றிற்கும் இருபிரிவினைகள் ஏற்பட்டிருக்கிறது. அதுவே அண்டம் பிண்டம் எனவும், அந்தரங்கம் பகிரங்கம் எனவும், லாஹிரு பாத்தின் எனவும் வழங்கப்பெறுகின்றது. அகம், அண்டம், அந்தரங்கம், பாத்தின் என்பவை உட்தோற்றங்கள். புறம், பிண்டம், பகிரங்கம், லாஹிரு என்பவை வெளித்தோற்றங்கள். அதாவது, தானல்லாத புறக்கருமங்களுக்காக பாடுபடுதல் வெளித்தோற்றம். தன்னைத் தானறியப் பாடுபடுதல் உட்தோற்றம். புறத்தோற்றங்களுக்காகப் பாடுபடுவதால் ஜனன விருத்தியும், உட்தோற்றங்களுக்காகப் பாடுபடுவதால் முத்தி சாதனமும் வந்தெய்தும். நிற்க,

இந்தியாவில் சுயராச்சியம் பெறுவதற்காக அநேக தேசாபிமானிகள் அதிக பிரயாசை எடுத்துவந்தார்கள், வருகிறார்கள் என்பது உலகமறிந்ததேயாம். அத்தகைய முயற்சியானது நமது தாய்நாட்டிற்கு சிறந்த நன்மை பயக்கத்தக்கதேயாயினும் சுயராச்சியம் கிடைப்பது அருமையினுமருமை என்பது கற்றவ

ரும் மற்றவரும் தெள்ளிதில் உணரற்பாலதே. அப்படி சுயராச்சியம் கிடைப்பினும் பூனைக்குயார் மணிகட்டுவது? என்னும் எலிக்கதைபோல் சுயராச்சியம் பெற்ருல் அதை எம்மதத்தினர் வகிப்பது என்பது ஐயத்திற் கிடமாயிருக்கிறது.

ஒருவாறு சுயராச்சியம் கிடைப்பினும் இந்துதேசவாசிகள் வகிப்பது சிரம சாத்தியமேயாம். ஏன்! இந்துதேச வாசிகளுக்குள் மதத்துவேஷம், சாதித்துவேஷம் அதிகரித்து சகோதரத்துவம் இல்லாமற் போனதுதான் அதற்குக் காரணம். ஆனல் சில தேசிய விளம்பரங்களில்,

அல்லாஹு அக்பர்! வந்தே மாதரம்!!
ஹிந்து முஸ்லீம்கே ஜே!!!

என்று எழுதி சகோதரத்துவம் வந்துவிட்டதாக ஆரவாரிக்கப் பெறுகின்றன. 'அல்லாஹு அக்பர்! வந்தேமாதரம்! ஹிந்து முஸ்லீம்கே ஜே!' என்று காகிதத்தில் மாத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டால் அச்சாபீஸ்காரர்கள் கூலியை ஒன்றிற் கிரண்டாக வாங்கிக்கொண்டு எப்படி எழுதிக்கொடுக்கிருர்களோ அப்படியே அச்சடித்துக் கொடுத்துவிடுகிருர்கள். அதனல் ஹிந்து முஸ்லீம்களுக்குள் சகோதரத்துவம் வந்துவிட்டதாகக் கருதுவதற்கு இடமுளதா? இல்லை. ஏன்? தேன் என்று காகிதத்தில் அச்சடித்திருந்தால் எட்டுச்சுரைக்காய் கறிக்காகாதென்பது போல் அவ்வார்த்தை தித்திக்குமா? உண்மையான தேனைப் புசித்தாலல்லவோ தித்திக்கும். அதுபோல் நமதுசெய்கையில் ஹிந்து முஸ்லீம்களுக்குள் சகோதரத்துவம் என்னும் ஒற்றுமையைக் காண்பித்தல் அவசியமல்லவா? ஆனல் தற்காலம் உண்மையில் அவ்வாறு நடைபெறுவதாகத் தெரிபவில்லை. ஏன்! ஹிந்துக்கள் முஹம்மதியர்களை நேரில் காணும்போது மாத்திரம், சாகிபு, ராவுத்தர், மரைக்காயர் என்று மரியாதையாக அழைக்கின்றனர். காணுதவிடத்தில் துலுக்கன் என்று இகழ்ச்சியாகவும் சிலர் நேரிலும் பேசுகிருர்கள். துலுக்கர் என்பது துருக்கர் என்பதின் திரிபு. அதாவது முற்காலத்தில் துருக்கி (Turkey)

தேசத்தினின்றும் வந்து இந்தியாவில் முஹம்மதிய மதத்தை ஸ்தாபித்தவர்கள் துருக்கிதேச வாசிகளாதலால் அவர்களுக்குத் துருக்கர் என வழங்கப்பெற்றுளது. அதை சரிவர உச்சரிக்கத் தெரியாமையால் துருக்கரைத் துலுக்கர் என்றும், அஃதொரு இகழ்ச்சிப் பதமென்றும் அறியாமையாற் புறமதத்தினர்கள் நினைக்கின்றனர். இவ்வாறே முஹம்மதியர்கள் ஹிந்துக்களை நேரிற் கண்டால் ஐயர், முதலியார், செட்டியார், பிள்ளை முதலான பட்டங்களை வழங்குகிறார்கள். காணாதவிடத்து பாப்பான், தம்மளன், கோவணங்கட்டி, மாவுக்காரன் என்று இகழுகிறார்கள். இந்தக் கர்ணகடூரமான வார்த்தைகளை இங்கே காண்பதருமையாயினும் தீவாந்தரங்களுக்கு யாத்திரை செய்யும்போது கப்பல்களில் பிரத்தியட்சமாகக் காணலாம். அன்றியும் இந்துக்களுக்குள் சைவ வைஷ்ணவ தூஷணமோ நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. ஆனால் ௸ தூஷணமானது சைவர்களுக்குள் பெரும்பாலும் கிடையாதென்றே சொல்லலாம். ஏன்! ஒரு சுத்தசைவன் இராமகிருஷ்ண பிள்ளை என்பதுபோன்ற வைஷ்ணவ நாமங்களை அபேதமாய் சூடிக்கொள்வான். வைஷ்ணவர்களோ நாய், கழுதை, வேறு சாதாரண படங்களை அழகாக வைத்துக்கொண்டாலும் வைத்துக்கொள்வார்கள். சைவசமய சம்பந்தமான படங்களை கண்ணால் கண்டாலுங்கூட அது பெரிய அபசாரமென நினைத்து குளங்குட்டைகளுக்கு அதே நிமிடம் ஓடிப்போய் ஸ்நானஞ்செய்ய ஆரம்பிப்பார்கள். அதிலும் வடகலை நாமதாரிகளோ! பெரிய ஆரவாரஞ்செய்வார்கள்.

பிரபுலிங்கலீலை.

எங்குரு நந்தி தோன்றுநாட் புதுமை
என்சொல்வாங் கண்டுமுட் டென்னும்
வெங்குண அமணா ருளத்தெரி மழுவோன்
வேடங்கண் டஞ்சலி செய்ய
அங்கொரு நேயம் பிறந்தது திருமால்
அடியவ ருளத்தினில் எங்கள்
சங்கரன் இறைவன் என்றொரு ஞானஞ்
சார்ந்தது தனையறி யாமல்.

மஹாவிஷ்ணுவுக்கே அடிமைபூண்டொழுகும் வைஷ்ணவர்களுக்குள்ளும் தென்கலை வடகலை சண்டையோ அதிகரித்து ஒரு காலத்தில் மன்னார்குடி இராஜகோபால சுவாமி விக்கிரகத்தின் மீதுள்ள Y இவ்வடையாளமுள்ள தென்கலை நாமத்தை வடகலை கட்சிக்காரர்கள் பிரதிபாவண்ணம் U இவ்வாறு வடகலை நாமமாக அரத்தினால் இராவிவிட்டார்கள் என்பது கர்ணபரம்பரை. சைவர்களுக்குள்ளும் வேதாந்த சித்தாந்த கட்சியதிகரித்து மண்டை உடைபடுகின்றது. அதிலும் சைவம், வீரசைவம், என்னும் உயுத்தமோ அதிகரிக்கின்றது. முஹம்மதியர்களுக்குள்ளும் ஹனபி, ஷாபி, அம்புலி, மாலிக் என்கிற மதுஹபின் பேதங்களும் காதிறியா, முதலான தறீக்குகளின் பேதங்களும் சேர்ந்து பகைமூண்டு மூலைக்குமூலை பத்துவாக்கள் (கண்டனம்) புறப்பட்டு விடுகின்றன. ஹிந்துக்களுக்குள்ளும் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்றும், சைவப் பிராம்மணர்களுக்குள் ஆதிசைவர்களாகிய குருக்கள் வீட்டில் ஸ்மார்த்த சைவப் பிராமணர்கள் சாப்பிடுவதில்லை என்றும், வைஷ்ணவப் பிராமணர்களில் தென்கலை நாமதாரிகள் வீட்டில் வடகலை நாமதாரிகள் சாப்பிடுவதில்லை என்றும், சில வேளாளர்களில் ஒருதாய் வயிற்றில் பிறந்த பிள்ளைகளில் ஒருவருக்கொருவர், "நீ கலியாணஞ் செய்த இடம் தாழ்ந்த இடம். நான் கலியாணம்செய்த இடம் உயர்ந்த இடம். நீ பெண்கொடுத்த இடம் தாழ்ந்தது. நான் பெண்கொடுத்த இடம் உயர்ந்தது. நீ ஏழரை மாற்று. நான் பத்தரைமாற்று" என்று தாரதம்மியச் சண்டைகள் ஏற்பட்டு நன்மை தின்மை ஏற்பட்ட காலத்திலுங்கூட ஒருவர் வீட்டில் ஒருவர் அன்னபானாதிகள் அருந்தாதிருப்ப தென்பதை நான் பிரத்திசட்சமாகப் பார்த்திருக்கிறேன்.

நமது தாய் நாடென்னும் கழனியில் இவ்விதமான குழப்பமென்னும் களைகளாகிய புற்பூண்டுகள் நிரம்ப முளைத்திருக்கும் போது சுயராச்சியம் என்னும் நெற்பயிரானது சகோதரத்துவம் ஒற்றுமை என்னும் தண்ணீரால் வளர்ந்து க்ஷேமம் என்னும்

கதிர் எவ்வாறு உண்டாகும் என்பதுதான் ஆராய்ந்துகொள்ளக் கிடக்கின்றன. நமது முழுமுதற் கடவுள் நமது தாய்நாட்டின் பேதாபேதமென்னும் களைகளைநீக்கி சுயராச்சியமென்னும் நெற்பயிரால் நமக்கு இன்னருள் பாலிப்பாராக. நிற்க,

இதுதான் சுயராச்சியம்.

இதுவரையில் புறத்தோற்றமாகிய சுயராச்சியத்தைப் பற்றிச் சுருக்கமாக சொல்லிவந்தோம். இனி அகத்தோற்றமாகிய சுயராச்சியத்தைப் பற்றி விவரிப்பாம்.

இந்நிலவுலகில் மனிதராகப்பிறந்த ஒவ்வொருவரும் தேகமென்னுங் காயாபுரியில் ஏகச்சக்ராதிபதியாக வீற்றிருந்து பேரின்பப் பெருவாழ்வை யடையவேண்டுவது தான் மிக்க அவசியம்.

(இன்னும் வரும்)

(பத்திராதிபர்.)

# கன்சுல் இஸ்லாம்

## "பி ஸ் மி லி ன்" சிறப்பு.

'பிஸ்மில்' என்பதானது பிஸ்மில்லா ஹிர்றஹ்மா நிர்றஹீம் என்னும் ஒரு சிறந்த தியானத்தின் சுருக்குவசனமாம். எந்தக் காரியத்தைப் பற்றியாவது எழுதப்புகும்போது எப்படி இந்துக்கள் பிள்ளையார்சுழி (உ) போடாமல் எழுதுவதில்லையோ, எப்படிப் பிள்ளையாரைத் துதிக்காமல் ஒருகாரியத்தை ஆரம்பிப்பதில்லையோ அதுபோல முஹம்மதியர்கள் எதை எழுத ஆரம்பித்தாலும், எதைப்புசிக்க ஆரம்பித்தாலும், எந்த வசனத்தை எந்தப்பாடலை ஓத ஆரம்பித்தாலும், இன்னும் எந்தக் காரியத்தைச்செய்ய முயன்றாலும் "பிஸ்மில்லா ஹிர்றஹ்மா நிர்றஹீம்" என்பதை ஆரம்பிக்காமல் ஒருகாரியத்தையும் செய்யமாட்டார்

கள். அத்தகைய தியானமானது 19 எழுத்துக்கள் கொண்ட ஒரு திவ்ய வசனமாகும். அது, (பே B), ஸீன், மீம், அலிபு, லாம், லாம், ஹ்ஹே, அலிபு, லாம், றே, ஹே, மீம், நூன், அலிபு, லாம், றே, ஹே, யே, மீம் என்னும் அறபிப்பாஷையின் 19 எழுத்துக்கள் கொண்டதாம்.

## பிஸ்மில் அப்ஜத் 786.

இந்த 19 எழுத்துகளும் அப்ஜத் கணக்கின்படி முறையே 2, 60, 40, 1, 30, 30, 5, 1, 30, 200, 8, 40, 50, 1, 30, 200, 8, 10, 40 எண்களை யுடைத்தாயிருக்கிறது. இவைகளைக் கூட்டிப் பார்த்தால் 786 ஆகின்றன. இதனாலேயே பிஸ்மில்லா ஹிர் றஹ்மா நிர்றஹீம் என்பதிற்கு பதிலாக (786) என்னுந் தொகையை எழுதுகின்றார்கள்.

அல்லாகுத்தாலாவுடைய சமுகத்திலிருந்து நபிமார்களுக்காக உலகத்திலிறக்கிய சுகுபுகள் 100-ம் வேதங்கள் 4-ம் ஆக 104. அவற்றுள்:—

சீதுநபி அவர்களுக்கு சுகுபு 50, இதுரீசுநபி அவர்களுக்கு 30, இபுறுஹீம்நபி அவர்களுக்கு 10, மூஸாநபி அவர்களுக்கு தௌறுத்துக்குமுன் 10. பின்னர் அப்ரானிப் பாஷையில் தௌறுத்து வேதமும் தாவூது நபி அவர்களுக்கு யூனானிப் பாஷையில் ஸபூறு வேதமும் ஈசாநபி அவர்களுக்கு சுரியானிப் பாஷையில் இஞ்சில்வேதமும் முகம்மதுநபி அவர்களுக்கு அறபானிப்பாஷையில் புறுக்கானுல்அலீம் என்னும் வேதமும் இறங்கிற்று.

இத்தன்மையாக இறங்கிய சுகுபுகளும் வேதங்களும் குர்ஆன்ஷரீபிலும், குர்ஆன்ஷரீபு பாத்திஹாவென்னும் அல்ஹம்து சூறுவிலும், அல்ஹம்து சூறுவானது பிஸ்மிலிலும், பிஸ்மிலானது அதன் முதல்அட்சரமான (பே B) என்கிற எழுத்திலும் அந்த எழுத்தானது அதின் கீழ்குறித்துள்ள (புள்ளி) நுக்தாவிலும் அடங்கியிருப்பதாக கூறப்பெற்றுள்ளது.

பிஸ்மிலின் சிறு:—'பிஸ்மில்லா ஹிர்றஹ்மாநிர்றஹீம்' என்பதிலுள்ள அட்சரங்களில் பே என்னும் அட்சரமானது பசீறென்

னும் இஸ்மினுடைய ஆரம்பமாகும். ஸீன் என்பது ஸமீஃ என்கிற இஸ்மினுடைய ஆரம்பமும், மீம் என்பது மலீக் என்கிற இஸ்மின் ஆரம்பமும், அலிபு என்பது அல்லா என்கிற இஸ்மின் ஆரம்பமும், லாம் என்பது லத்தீபு என்கிற இஸ்மின் ஆரம்பமும், ஹே என்பது ஹாதி என்கிற இஸ்மின் ஆரம்பமும், றே என்பது றஸ்ஸாக் என்கிற இஸ்மின் ஆரம்பமும், ஹே என்பது ஹலீம் என்கிற இஸ்மின் ஆரம்பமும், நூன் என்பது நாபிகுநூறு என்கிற இஸ்மின் ஆரம்பமும் ஆகும்.

உலகத்திலுள்ள வஸ்துக்களடங்கலையும் பிஸ்மில் சொல்லி ஆரம்பிப்பதால் அல்லாகுத்தாலாவை கூப்பிடுகிறதுபோலாகும்.

ஒருவனை 19 சபானியாமலக்கு (தேவதூதர்)களை விட்டு ஈடேற்றமாக்கிவைக்க அல்லாகுத்தாலா நாடவேண்டுமென்றால், தினம் 19 எழுத்துக்களடங்கிய பிசுமிலைத்தவறாமல் முழுவதும் ஓதிவரவேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு ஹறுபு (அட்சரம்) களினாலும் அந்த மலக்கு (தேவதூதர்)களின் ஒவ்வொரு துன்பங்களினாலும் விடுவிக்கப்பெறுகிறது.

பிஸ்மிலின் சுன்னத்துகள்:—அன்னபானதிகள் அருந்தும்போதும், ஜமாகு (சையோகம்) செய்யும்போதும், வாகனங்களில் ஏறும்போதும், வாசற்கதவை அடைக்கும்போதும், விளக்கை அவிக்கும்போதும், பாத்திரங்களை மூடிவைக்கும்போதும், வேறெவ்விதமான பரிசுத்தங்களைத் தேடும்போதும், நற்காரியங்களைச் செய்யும்போதும், பிஸ்மில் சொல்லிக்கொள்வது சுன்னத்தாக இருக்கிறது.

நபிசல்லல்லாகு அலைஹிவசல்லமுடைய உம்மத்துகளை என்னுடைய 3 இஸ்மைக்கொண்டு சிறப்பாக்கியிருக்கிறேன். அதாவது, பிஸ்மிலில் உண்டான அல்லாஹ், றஹ்மான், றஹீம் என்பவைகளினால் என்று அல்லாகுத்தாலா, மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வஹி அறிவித்திருக்கிறான்.

கியாம (தீர்ப்பு) நாளில் உம்மத்துகளுடைய அமல்களை நிறுக்கும்போது, தொழுகையில், ஒரு றக்ஆத்து முந்தினவர்களுடைய தொழுகை ஆயிரம்(1000)றக்ஆத்திலும் அதிகமாகக்கா

னும். அப்போது மஹஷர் வெளியிலுள்ள கூட்டங்கள் அதி சயிப்பார்கள், அப்படி அதிகமானது தொழுகையில் பிஸ்மில் சொன்னதின் பயனாகும்.

பிஸ்மிலானது முதலில் ஆதம் நபி அவர்களுக்கு இறக்கப் பெற்றது. அதை அவர்கள் அதிகமாக ஓதிவந்த சபபால் அவர்கள் செய்த பிழைகளை மன்னித்துப் பிசுமிலை உயர்த்தப்பெற்று பிறகு நூகு நபி அவர்களுக்கு இறக்கப்பெற்றது. அதை அவர்கள் கப்பலிலிருந்து ஓதிய சபபால் ஜெபல்ஜூதி என்ற மலையின் மீது கப்பலை தங்கியிருக்கச்செய்து பிசுமிலை உயர்த்தப் பெற்று பிறகு இபுறுஹீம் நபி அவர்களுக்கு இறக்கப்பெற்றது. அதை அவர்கள் நமுறூது என்னும் துஷ்டனுடைய கவண் பொறியி லிருந்து ஓதிய சபபினால் நெருப்பைக் குளிரச்செய்து பிறகு உயர்த்தப்பெற்றது. பிறகு மூஸா நபி அவர்களுக்கு இறக்கப்பெற் றது. அதை அவர்கள் அதிகமாக ஓதிவந்த சபபால் பிருஅவுனு டைய சைனியங்களை யடக்கி நீலென்னும் நதியைக்கடந்து நன் மைபடையச்செய்து உயர்த்தப்பெற்றது. பின்னர் சுலைமான்நபி அவர்களுக்கு இறக்கப்பெற்றது. அவர்கள் அதைஅதிகமாக ஓதி வந்த நன்மையினால் ஜின், மிருகம், பறவை, மனிதர் முதலான சகல பிராணிகளும் பணிவிடை செய்யச்செய்து உயர்த்தப்பெற் றது. பின்னர் ஈசாநபி அவர்களுக்கு இறக்கப்பெற்றது. அதை அவர்கள் அதிகமாக ஓதிவந்தபயனால் வெண்குஷ்டம், கருங்குஷ் டம் முதலான வியாதிகளை நிவர்த்திப்பவர்களாகவும், கடவுளு டைய உத்தரவினால் இறந்தவர்களை உயிர்ப்பிக்கிறவர்களாக விளங் கச்செய்து உயர்த்தப்பெற்றது. பின்னர் நமது முஹம்மதுநபிசல் லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுக்காக இறக்கப் பெற்றது, அதனால் அவர்கள் அளவில்லாத அற்புதங்களைச் செய்தார்கள்.

பிஸ்மிலை 12000 தடவை ஓதினவன் ஹாஜத்து (எண்ணம்) எவ்விதமாயிருந்தபோதிலும் நிறைவேற்றிக் கொடுக்கப்படும், ஆனால் (1000) ஆயிரம் பிஸ்மிலுக்கு 1 தடவை 2 றக்ஆத்து தொழுது நபிபேரில் சலவாத்தும் ஓதி தன் காஜத்து நிறைவேறத் துஆவும் ஓதவேண்டும். பிசுமிலை 786 தடவை எந்தக்காரியத்தை

நினைத்தாவது 7 நாள் தொடர்ச்சியாக ஓதிவந்தால் தீங்குவிலகி நன்மைகளுண்டாகும். வியாபாரங்கள் அதிகமாகும். விற்காத சாக்குகளும் விற்பனையாகும்.

பிசுமில்லை ஓதுவதால் ஒரு அட்சரத்துக்கு 4000 பாவங்களை அழித்து 4000 நன்மை எழுதப்பெறறு 4000 தறஜாவைக் கொடுக்கப்பெறும்.

நபிநாயகம் அவர்கள் மிகுறாஜு இரவில் ஒரு குப்பாவைக் கண்டார்கள். அதற்கு கதவும் பூட்டும் தங்கத்தினல் போடப் பெற்றிருந்தது. அதனுள் மனு, ஜின் ஆகிய 2 படைப்புகளும் சேர்ந்து அந்தக் குப்பாவிலிருந்ததால் மலைச்சிகரத்தில ஒருபறவை யிருந்தாப்போ லிருந்ததைக் கண்டு திரும்பிவர நாடினார்கள். அப்போது 'நீங்களேன் அந்தக் குப்பாவிற் புகுந்து பார்க்கவில்லை' யென்று அசரீரிவாக்கிய முண்டாயிற்று. அதற்கு நாயகம் அவர்கள் 'பூட்டியிருப்பதால் திரும்பிவர நாடினேன்' என்றார்கள். அதற்கு அந்தப் பூட்டின் திறவுகோல் தங்கள் கைவசத்தில்தானே யிருக்கிறது. அதானது 'பிஸ்மில்லா ஹிர் றஹ்மா னிர் றஹீம்' என்று மறுபடியும் சத்தமுண்டானது. அது போல் நாயகம் அவர்கள் பிசுமில் சொன்னவுடன் வாசற்கதவு திறந்தது. அதனுட்புகுந்து நோக்கும்போது அந்தக் குப்பாவுடைய 4 தூண்களிலும் பிஸ்மில் முழுவதையும் ஒவ்வொரு சொல்லை ஒவ்வொரு தூணிலும் எழுதியிருந்தது. அந்த தூண்களில் 4 நதி ஓடுகிறது. அது பிசுமிலுடைய மீம் என்பதிலிருந்து தெளிந்த தண்ணீரும், அல்லாஹ் உடைய ஹே என்பதிலிருந்து பாலாறும், றகுமானுடைய மீம் என்பதிலிருந்து மதுவாறும், றகீமுடைய மீம் என்பதிலிருந்து தேனாறும் ஓடிவரக் கண்டார்கள். அப்போது 'முஹம்மதே! உமது உம்மத்துகளில் எவராவது சாலிகான கல்புடன் இந்த இசுமை ஓதிவருவார்களாகில் நாம் அவர்கட்கு இந்த 4 ஆற்றின் தண்ணீரைப் புகட்டுவோம்' என்று நாயன் சொன்னதாக நபிநாயகம் அவர்கள் திருவாய்மலர்ந்திருக்கிறார்கள். (இன்னும் வரும்.) (மணிமுத்து நாயகம்)

வேதாந்த பாஸ்கரன் ஆசிரியர்.

## கடவுளியல்.

(82-ம் பக்கத் தொடர்ச்சி.)

சிற்சபையில் நடிக்கின்ற நாயகனூர் தமக்குச்
  சேர்ந்தபுறச் சமயப்பேர் பொருந்துவதோ வென்றாய்
பிற்சமயத் தார்பெயரும் அவர்பெயரே கண்டாய்
  பித்தரென்றே பெயர்படைத்தார்க் கெப்பெய ரொவ்வாதோ.

கண்ணுக்குச் சூரியன் என்னும் விண்மணியைப் பார்ப்பது கடினமாக இருப்பதுபோல், நித்திய வஸ்துவாகிய கடவுளை நோக்கும் விதம் மனிதர்கட்கு அருமையாக இருக்கின்றது. சூரியன் பகல் (15) நாழிகை நேரத்தில் ஆகாயவுச்சியிலிருக்கும் போது, படிகத்தில் வர்ணம்பற்ருமல், ஒருபக்கம் சாய்ந்தவுடன் அந்தப் படிகத்தில் பஞ்சவர்ணங்களும் தோன்றும். அதுபோல் கடவுளானவர், மனிதர்களிடத்தில் பஞ்சேந்திரியச் சேட்டையுள்ளவரையில் காட்சிகொடுக்காமல் ஞாதுரு ஞானஞேயத்தைப் பற்றற நீக்கிய சிவராச யோகிகளுக்கே தோன்றுவர். இதுபற்றியே "பேசிடாதிருப்பீராகில் ஈசன்வந்து பேசுமே" என்று ஆன்றோர் கூறியுள்ளார்.

நேத்திரமானது, சூரியனின் பிரகாசத்தினுல், தோற்றப்படும் பதார்த்தங்களைப் பார்ப்பதேயன்றி, சூரியனைப் பார்ப்பதில்லை. அதுபோல் மனிதர்கள், கடவுளால் சிருட்டிக்கப்பட்ட நட்சத்திரயங்களை விரும்புகிருர்களேயன்றி, இத்தகைய திருவிளையாடல் செய்தவர் யாவர்? அவர் எங்கே யிருக்கிருர்? எவ்விதமாய்க்காணலாம்? என்று ஆலோசிப்பது பெரும்பாலுமில்லை.

தாயுமானவள்ளல்.

குன்ருத மூவுருவா யருவாய் ஞானக்
  கொழுந்தாகி அறுசமயக் கூத்து மாடி
நின்ருயே மாயையெனுந் திரையை நீக்கி
  நின்னையா ரறியவல்லார் நினைப்போர் நெஞ்சம்
மன்ருக இன்பக்கூத் தாட வல்ல
  மருந்தே என்கண்ணே மாமணியே நால்வர்க்
கன்ருலின் கீழிருந்து மோன ஞானம்
  அமைத்தசின்முத் திரைக்கடலே அமரரேறே.

சூரியன் ஒன்றாக இருந்தும், ஒவ்வொரு வீட்டிலும் வைத்திருக்கிற தண்ணீர்க் குடங்கள்தோறும், தடாகங்கள் முதலியவைகளிலும் பிரதிபலித்துக் காண்கின்றது. அதுபோல் கடவுள் ஒருவராயிருந்தும் சர்வ மதங்கள்தோறும் அந்தந்த மதத்திற்கு இயைந்த பெயருடன் விளங்குகின்றார். இந்தவுண்மையை அறியாமல் சனங்கள் சண்டையிட்டுக்கொள்வது என்ன பரிதாபம்!

### சிவஞானவள்ளல்.

அதிதிதன்மைந்த ரலமருகாலைப் பிரமகீதைதனைப் பேசினனெவனோ
சிதாகாயத்திற் றிருவுருத்தாங்கி மறலியைமுனிந்த வரதனெவனோ
வரன்முறையுலகம் வயினுதிக்க நான்முகத்திருந்து நான்மறையுரைத்தன்
றுபங்கடத்தி லொளித்தவனெவனோ அவனேபிரம மென்றறிமன்னே!

கல்லாலின்கீழ்க்கடவுளாகிப் பொல்லாஞானம்புரிந்தவனெவனோ
மால்வரைவில்லாயவலியவர்புரங்க ணீறெழவொருக்கின்றமூவரைச்
சேவடிநீழலிற்சேர்த்தவனெவனோ காலனைமாட்டிக்கவின்சிறுபாலன்
மரணந்தவிர்ப்பான்வந்தவனெவனோ அவனேபிரமமென்றறிமன்னே!

### பகவற்கீதை.

சந்திரனான்நாண்மீனிற் சாமநான்நான்மறையில்
இந்திரனான்தேவர்களில் இந்திரியங்களில்மனநான்
எந்திரமாமுருவுகளிற் சேதனநானுருத்திரரின்
மந்திரமாஞ்சங்கரனான் இயக்கரில்வைச்சிரவணனான்.

ஓர் கிருகத்தனுக்கு நான்குபுத்திரர்கள் இருந்தார்களென்று எண்ணிக்கொள்வோம். அப்புத்திரர்களுள் ஒருவன் கலெக்டர் உத்தியோகஞ்செய்துக் குடும்பத்தைப் பாதுகாக்கிறான். மற்றொருவன் ஜட்காவண்டி ஓட்டுகிறான். மற்றொருவன் பிதுரார்ச்சிதமான திரவியங்களைக் கள், கஞ்சா, கூத்தியார் முதலிய வீண் செலவு செய்கிறான். மற்றொருவன் யாதொரு தொழிலும் புரியாமல் சோம்பேறியாக இருக்கிறான். இந்நான்கு புத்திரர்களுள் எந்தப் பிள்ளைமீது அந்தத் தகப்பனுக்கு அதிகப் பிரியமிருக்கும்? புகழும் பெருமையும் வரும்படியுமுள்ள கலெக்டர் உத்தியோகஞ்செய்யும் புத்திரன்மீதன்றோ? அதுபோல் கடவுளுக்கு உலகத்திலுள்ள சர்வ சீவராசிகளின்மீது பட்சம் ஏற்பட்டிருப்

பினும் தன்னையறிந்து தோத்திரஞ்செய்யும் மனிதன் எவனோ அவன் மீதல்லவா அதிகப் பட்சமிருக்கும்.

இந்திராணி, காமதேனு, கற்பகவிருக்ஷம் நீங்கலாக, எதைக் கேட்டாலும் தருகிறேனென்று தேவேந்திரன் முசுகுந்த சக்கரவர்த்திக்குச் சொல்ல, நம்மை மறந்து சொன்னபடியால் நீ நீசனாகக்கடவதென்று தியாகராஜர் தேவேந்திரனைச் சபிக்க, தேவேந்திரன் பயந்து வணங்கி, "உம்மைப் பூசிக்க அருள்புரிய வேண்டு"மெனப் பிரார்த்திக்க அதற்குத் தியாகராஜர், நீ நீசத்துவத்தை யடைந்திருப்பதால் நேரில் பூசிக்கலாகாது. கண்ணுடியில் பூசிக்கலாமென்றனர். அவனே யானையேறும் பெரும்பறையனென்று திருவாரூரில் திருவிழாக்காலங்களில் வெள்ளைக்குடை பிடித்துக்கொண்டு சுவாமிக்கு முன்பு செல்வதை இன்றும் பிரத்தியட்சமாகக் காணலாம். நிறைபணி காலத்தில் திருவாரூரில் கோவில் முழுவதும் கண்ணுடி வைத்திருப்பதற்குக் காரணமும் இதுவே. ஆகையால் எந்தக் காரியத்தைச் செய்தாலும், எதைப் புசித்தாலும் 'அரனை மறவேல்' என்ற பழமொழிப்படி கடவுளையே முதன்மையாகக்கொண்டு செய்தல்வேண்டும். இதுபற்றியே முகம்மதியர்கள் ஒருவன் ஒரு முக்கிய காரியத்தைப் பற்றிக் கேட்டால் அதற்கு சரிசொல்வதற்கு பதிலாக, "இன்ஷா அல்லா," அதாவது 'கடவுள் போதுமானவர்' என்றும், ஒன்றைப் புசிக்கும்போது, "பிஸ்மில்லாஹி" என்றும் கடவுள் நாமத்தைத் தியானித்து விட்டுப் புசிக்க ஆரம்பிக்கிறார்கள்.

பிரபுலிங்கலீலை.

குடிப்பனவிழுங்குவ கூறெயிற்றினுற்
கடிப்பனநக்குவ அனைத்துங்கைம்மலர்
அடுத்துளசிவன்றனக் கற்பித்துண்பவன்
விடுத்தவன்மேல்வரும் வினைகள்யாவுமே.

ஒரு நகரத்தை நோக்கிப் பிரயாணிகள், பல திசைகளிலிருந்து பல பாதைவழியாக வந்தாலும், முடிவில் அவர்கள் எல்லோரும் ஒரே பட்டினத்தை அடைகின்றார்கள், காவேரி

முதலிய நதிகள், அநேக பிரிவாய்ப் பற்பல திசையை நோக்கிச் சென்றாலும், அவையனைத்தும் முடிவில் சமுத்திரத்தையே சேர்கின்றன. ஒரு மனிதனை வெவ்வேறு முறைமையால், தந்தையென்றும், மாமன் என்றும், மைத்துனன் என்றும், அண்ணன் என்றும், தம்பி என்றும் பலபேர் பலவிதமான பெயரிட்டழைத்தாலும், அவையெல்லாம் அம்மனிதன் ஒருவனையே குறிக்கப் படுகின்றன. அதுபோல் இவ்வுலகத்திலுள்ள சமயகோடிகள், தம்தெய்வம் எம்தெய்வம் என்று அதேவேலையாகப் பிரசங்க மேடைகளிலும், தெருக்களிலும், சந்து பொந்துகளிலும் நின்று கொண்டு, பேரோலமிட்டு வாதம்புரிந்து தத்தம் சமயநூல் விதிவிலக்குப்படி வெவ்வேறு கடவுளாகப் பாவித்து வணங்கினாலும் அவ்வணக்கமெல்லாம் ஒரே கடவுளைச் சார்ந்த வணக்கமேயன்றிப் பல வணக்கமாகாது.

திருமந்திரம்.

கத்துங்கழுதைகள் போலுங்கலதிகள்
சுத்தசிவனெங்குந் தோய்வுற்றுநிற்கின்றான்
குற்றந்தெரியாதார் குணங்கொண்டுகோதாட்டார்
பித்தேறிநாளும் பிறந்திறப்பாரே.

தாயுமானவர்.

சாதிகுலம்பிறப்பிறப்புப்பந்தமுத்தி யருவுருவத்தன்மைநாமம்
ஏதுமின்றிஎப்பொருட்குமெவ்விடத்தும் பிரிவறநின்றியக்கஞ்செய்யுஞ்
சோதியைமாத்துவெளியைமனதவிழ நிறைவானதுரியவாழ்வைத்
தீதில்பரமாம்பொருளைத்திருவருளே நினைவாகச்சிந்தைசெய்வாம்.

வேதாந்த பாஸ்கரன்.

---

## குண்டலிசத்தி.

(78 - ம் பக்கத் தொடர்ச்சி.)

பஸ்திரிகை.

வேதாந்த பாஸ்கரன் அட்டாங்க யோக அத்தியாயத்தில் குறிப்பித்திருக்கிறபடி பதுமாசனமிட்டு வாயைமூடி சரீரத்தினுள்ள வாயுவை ஒருநாசியின் வழியாகக் கொல்லன் துருத்தியைப்போல் வேகமாக இரேசித்துப் பூரகம் செய்யவேண்டும்.

இடதுநாசியை வலதுகையின் மோதிரவிரல் சுண்டு விரல்களால் அடைத்து வலதுநாசியால் துருத்தியைப்போல் விரைவாக இரேசக பூரகங்கள் செய்யவேண்டும். சிரமமேற்படின் அந்த நாசியினாலேயே பூரகஞ்செய்து, அங்குஷ்ட விரலால் வலது நாசியை நிரோதித்து இயன்றவளவு கும்பகம் புரியவேண்டும். அதன்பின் இடதுநாசியினால் இரேசிக்கவேண்டும். இவ்வாறே வலது நாசியையும் அடைத்துச் செய்யவேண்டும்.

இவ்வாறுசெய்வதனால் வாதபித்த சிலேத்துமங்களை யடக்கி சரீராக்கினியை விருத்திசெய்து சுகத்தைக் கொடுத்துச் சீக்கிரத்தில் குண்டலிசத்தியை விழிப்படையும்படி செய்கின்றது. இந்தக் கும்பகம் சீதோஷ்ணமாகிய எல்லாக் காலங்களிலும் செய்யத்தகுந்ததாதலால் இதையே அவசியம் செய்யவேண்டும்.

வேதாந்த பாஸ்கரன் மூன்றும் பாகமாகிய யோகரகசியம் என்னும் சாஸ்திரத்தில் விவரித்துள்ள நவவித முத்திரைகளில் முதன் முத்திரையாகிய மஹா முத்திரையான தானங்களில் குறிப்பிக்கப்பெற்ற கிரியைகளின் முறைமையினாலும், சத்துவாம்ச குணத்தைத் தரும் மேன்மையான ஆகாரங்களினாலும் இயமம், நியமம் முதலியவைகளிற் கூறியிருக்கும் பரிசுத்தங்களினாலும், யோக சித்திகளை விஸ்தரிக்கும் நன்மையான சாஸ்திரங்களைப் பார்ப்பதாலுண்டாகும் ஆனந்தபரவசத்தினாலும்,மேலான சத்துக்களாகிய சாதுசங்கப் பழக்கத்தாலுண்டாகும் வைராக்கிய விவேகத்தினாலும் சில ப்க்குவிகட்கு குறித்தகாலத்தில் நீங்காத பற்றுதலும் விடுதலும் நீங்கிய சமயத்தில் பிராணன்கள் தேவ வடிவமாகின்றன. அந்த வாயுக்களின் தன்மையை கரதலாமலகம்போல் செவ்வனே உணர்ந்தவர்கட்குத் தான் யோகசித்தியுண்டாகும்.

புரியட்டகசரீரம் என்னுஞ் சீவனுக்கு பிராணவாயுவென்னும் குண்டலிசத்தியானது வாழைப்பூவைப்போல் எட்டிதழ்களுடன் தலைகீழாய்த் தொங்கிக்கொண்டிருக்கும். இந்த வடி

வத்தை குண்டலிசத்தியின் யோகநித்திரையென்னும் ஊர்த்துவ முகமாக மேல்நோக்கி யிருக்குமாகில் குண்டலிசத்தியின் விழிப் பென்றும் மேலான சத்துக்கள் சொல்வார்கள். இத்தகைய குண் டலிசத்தியின் விழிப்பினாலேயே அடியிற் கூறியிருக்கிற அட்ட மாசித்திகள் உண்டாகின்றன.

அட்டமாசித்திகள்.

அட்டமாசித்திகள் என்பது அணிமா, மகிமா, இலகுமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என் பவைகள்.

1. அணிமா, இது பரம அணுவிலும் சர்வ ஜீவராசிகளிலும் பேதம் தோன்றாமல் தான்மிகவும் நுண்ணிய அணுவளவாய் சென்றிருக்கும்படியான சரீரத்தை உடைத்தாயிருத்தல்.

2. மகிமா, இது உயர்ந்த மகாமேரு கிரியைப்போல் ஆசு வேண்டுமெனினும் அவ்வண்ணமே பெரிய சரீரத்தோடிருத்தல். தனக்கிஷ்டப்படி விசுவரூபமெடுத்தலும் அண்டபிண்ட சராசரங் களின் நிறையும் பெருமையுடையோருமாயிருப்பர்.

3. இலகுமா, இது மகாமேரு பருவதம்போற் கனமாக இருக்கும் யோகியை மற்றவர்கள் தூக்கினால், லகுவான பரம அணுவைப்போல் எடுத்தற் கெளிதாயிருத்தல். சீக்கிர வேகி யாய் சேற்றிலும் பூமியிலும் அடி அழுந்தாமல் செல்லும் இலே சான சரீரமாகவிருத்தல்.

4. கரிமா, இது லகுவாயுள்ள பரம அணுவைப்போலிருக் குஞ் சிவயோகியை மற்றவர்கள் தூக்கினால் மகாமேருவிலும் அதிகபாரமாயிருக்கும். சண்டமாருதத்தினாலும் அசைக்கப்படா திருத்தலுமாம்.

5. பிராத்தி, இது சர்வலோகங்களிலும் தடையின்றி ஓர் விநாடிப் பொழுதில் சஞ்சரித்தல்.

6. பிராகாமியம், இது ஓர் சரீரத்திலிருந்து மற்றோர் சரீரத் தில் பிரவேசித்தல். (கூடுவிட்டு கூடுபாய்தல், பரகாயப்பிரவே

சம்) ஆகாய கமனம்பண்ணுதல். சகல லோகங்களிலுஞ் சென்று தனக்கு இச்சையாயுள்ள போகபோக்கியங்களை அனுபவித்தல், ஆகாயத்திற் சஞ்சரிக்குஞ் சூரியன் தனது பிரகாசத்தால் எப்பொருள்களுங் கட்புலனுக்குப் புலப்பட விளக்குவதுடன் தன்னையும்பிறருக்கு உணர்த்துவதுபோல், இந்நிலவுலகிலுள்ள பொருள் முழுவதையும், திரிகாலங்களையும், வானலோகத்திலுள்ள பொருள் முழுதையும், தனது சரீரத்தின் ஒளியால் பிறர்க்கு விளக்குவதுடன் தானும் இருந்தவிடத்திலிருந்தறிதல். ஆகாயம், பூமி இவற்றிலுள்ள சகல வஸ்துக்களையும் தானிருக்குமிடத்தில் வரவழைத்தல். முக்காலங்களையும் தனது சரீரத்திற்குள் அறிதல்.

**குணங்குடியார்.**

"அல்லும்பகலும் சுகானந்தசிட்டையில்
அண்டமும்பிண்டமும் தெரியும்."

7. ஈசத்துவம், இது கடவுளைப்போல் ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களைச் செய்யவும், சூரியன் முதலான நவக்கிரகங்களும் தனது ஏவல் கேட்டு நடக்கும்படிச் செய்யவும் வல்லமை பெற்றிருத்தல்.

8. வசித்துவம், இது கந்தருவர், கிம்புருடர், இந்திராதி தேவர்கள், திக்குப்பாலகர்கள், பறவைகள், மிருகங்கள், பூதங்கள், மனிதர்கள் முதலிய சகல சீவகோடிகளையும் தன் வசமாகக் கொண்டு ஆளுதல்.

சற்குரு மூர்த்தியினிடத்தில் உபதேசங்கேட்டு அவர் ஆக்ஞையின்படி யிடைவிடாமலும் வழுவாமலும் அப்பியாசித்துவரில் மேற்சொல்லிய அருமையான எண்வகையான சித்திகளும் ஒருவருடத்திற் கைகூடும்.

**திருமந்திரம்.**

முடிந்திட்டுவைத்து முயங்கில்ஓராண்டில்
அணிந்தஅணிமா கைதானுமிவனும்
தணிந்தஅப்பஞ்சினுந் தானொய்யதாகி
மெலிந்தங்கிருந்திடும் வெல்லவொண்ணாதே.

ஔவைக்குறள்.

அட்டமாசித்தியடையும் ஓராண்டினில்
இட்டமிதனைத் தெளி.

## அட்டமாசித்தி யுண்டாவதின் காரணம்.

முன் சொல்லிவந்த குண்டலிசத்தியைப் பூரகப் பழக்கத்தினால் பரிபூரணம்செய்து பிரகாசிக்கும்படி நின்றால், மகாமேரு கிரிக்கொப்பான வலிமையுண்டாகும். சரீரமும் அதிகமாகப் பெருக்கும். பூரகத்தின் பிராணவாயு நிறைந்திருக்கின்ற சரீரத்தை அறிவானது மேல்நோக்கினால் ஒரே தடவையில் ஆகாய கமனஞ் செய்விக்கும். குண்டலிசத்தியானது சர்ப்பத்தைப் போற் சீறி, தண்டைப்போல் உயர்ந்து, மேல்நோக்கி செல்லும். கயிற்றைப்போல் கட்டியிருக்காநின்ற நாடிகள் முழுவதையுந் தான் கிரகித்துச் சரீரம் இளைக்காதபடி காற்று நிறைந்த தோற் பையைத் தண்ணீரில் அமிழ்த்தினாலும் மேற் கிளம்புகின்ற தொடர்புபோல் சரீரத்தில் உயரத்தூக்கும். குண்டலிசத்தியானது சுழுமுனைக்குள் சென்று, பிரமரந்திரத்தின் மேலாகப் புறப்பட்டு 12 அங்குலத்தின் அளவில் சென்று, நாடிகள் முழுவதையும் நிரோதனம் செய்கின்ற இரேசகத்தில் இரண்டு நாழிகை அடைந்திருந்தால் ஆகாயகமனஞ் செய்பவர்களை தரிசிக்கலாம். அணிமாமுதலிய அட்டமாசித்திகளைச் செய்யாநின்ற சித்தர் குழாங்கள், சொப்பனவத்தையில் தோற்றுவதுபோல் ஞானதிருஷ்டியினால் ஆகாயத்தில் நிலையாகத் தோற்றுவிக்கும். வதனத்தின் முன்பு 12 விரல் அளவு சென்று இரேசகத்தினுடைய அப்பியாசத்தினால் நிலைபெற்ற பிராணனானது நீண்ட காலம் நிலைத்திருக்குமாயின் பரகாயப் பிரவேசம் செய்யும்.

அணிமாதி சித்திகளையும் எவ்விதச் செய்கையு மில்லாத முத்தியையும் சிவராஜயோகிகளே அடைவார்கள். சில மகானுபாவர்கள் சித்திகளைச்செய்து ஆனந்தித்திருப்பார்கள். சிலர் முத்தியைமட்டிலும் விரும்பி தனது எதார்த்த சொரூப பாவனையில் நிலைபெற்று நிற்பார்கள். ஆகலின் சித்திகளைக் கருதிச்செய்

யும் தவத்திற்கு காமியத்தவம் என்றும், முத்தி யொன்றையே விரும்பிச் செய்யுந்தவத்திற்கு நிட்காமியத்தவம் என்றும்பெயர்.

நிட்காமியத் தவத்தைப் புரிந்தவர்கள் சித்திகளைச்செய்ய வன்மை பெற்றிருந்தும் அந்தக்கரணங்களின் செய்கையாகிய சித்திகளைச் செய்தால் கைகூடிவந்த தவமானது செலவாகிக் குறைந்துபோகுமென்று ஏற்கனவே உணர்ந்து வெறுத்திருப்ப தனுலும்,இப்போது அந்தக்கரணங்களின் செய்கையற்று பிரம்ம சைதன்யத்தில் சதா விருப்பமுற்றுக் கலந்தவர்களா யிருப்பதனு லும், சனகாதி நால்வர்களும் மாபலி, பகீரதன் முதலிய சீவன் முத்தர்களும் சித்தியை விரும்பினரில்லை யென்றறிந்திருப்பதனு லும் காமியமாகிய சித்திகளைச் செய்யாமல் எவ்வித வல்லமை யும் இல்லாதவர்கள்போலிருப்பார்கள். சித்திகள் காலம்போக்கு தல் முத்தி காலாதீதமாகுதல்.

(இன்னும் வரும்)

வேதாந்த பாஸ்கரன் 2-ம் பாகம்.

## மனிதர் வாய்ப்படும் அகில உலக உயிர்ப்பிராணிகள் மகாநாடு.

---

(108-ம் பக்கத் தொடர்ச்சி.)

பெருமானும் மோக்ஷவின்பம் பெற்றார்கள். கஜேந்திர ஆழ்வார் முதலியோரும் அப்படியே! இப்படிப்பட்ட சரித்திரங்கள் சொல்லவேண்டுமானல் கோடானு கோடியுண்டு! எந்தப் புண் ணிய ஸ்தலங்களிலும் எந்த பக்திமார்க்கத்திலும் மோக்ஷ வழி களிலும் நாம் பெருமைபெற்றுக் கடவுளுக்கு வேண்டியவர்க ளாகவே யிருக்கிறோம். நாமில்லாவிட்டால் சோதிட சாஸ்திரம் லக்ஷமின்றி இறந்து பட்டுப்போகும். மேலும் நாம் கெட்டவர்க ளல்ல. நாம் வேறொருவருடைய சொத்துக்கு ஆசைப்படுவது கிடையாது. நமக்கு ஐயறிவுதான் உண்டு என்று தெரியாதவர் கள் சொன்னாலும் நாம் புலாலுண்பது கிடையாது. கள்ளுண்ப தில்லை. பொய் பேசுவதில்லை. சூதாடுவதில்லை. யாராவது பக்தி

மான்கள் அன்பப்பட்டவர்கள் நமது தேவர்களைக் கூப்பிட்டால்
வயிற்று வலியானாலும் காய்ச்சலானாலும் உடம்புக்கு முடிய
வில்லையென்று சொல்வதில்லை. பக்தர்கட்கு அருள் சுரக்கவேண்
டுமென்று எப்போது சிவபெருமான் விரும்புகிறாரோ அப்
போதே நமது ரிஷபதேவர் தயாரென்கிறார். மனிதர்கள் தமது
வாகனங்களி லேறவேண்டுமென்றா லெப்படியிருக்கிறது? குதி
ரை யிடக்குப்பண்ணினால் பயணம் நின்றுபோய்விடாதா? நாம்
அப்படிச் செய்வதில்லை. நம்முடைய சரித்திரத்தைப் பார்க்கட்
டும்! யாருக்காவது கஷ்டத்தை யுண்டாக்கி யிருக்கிறோமா? இல்
லவேயில்லை. மேலும் இந்த உலகத்து மனிதர்களுக்கு நம்மைக்
காப்பாற்றுவதற்காகப் பல வழிகளில் உதவிபுரிகிறோம். பாலும்
மோரும் நெய்யும் அவர்களுணவிற்குக் கொடுக்கிறோம். போர்
வைகட்குக் கம்பளியுரோமங் கொடுக்கிறோம். வயலுக்கு உரம்
போடுவதற்கு எரு சப்ளை செய்கிறோம். புத்தகங்கட்கு அட்டை
போட நமது தோல்களையும் கொடுக்கிறோம். இப்போது சீனி
செய்வதற்கு ததீசி முனிவரைப்போலவே நமது எலும்புகளையும்
கொடுத்து வருகிறோம். அவர்களுக்கு வாகனமாகவுமிருந்து
வருகிறோம். அவர்கள் உண்மையாக பக்தி செலுத்தினால் அவர்
களுடைய கடவுளரை நாம் தூக்கிக்கொண்டு வந்து அவர்களு
க்குமுன்னே விடுகிறோம். அவர்கள் கண்குளிரக்கண்டு களிக்
கிறவரை நாமும் பொறுத்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள்
தாயில்லாப் பிள்ளையாயிருந்தால் நமது பாலைக்கொடுத்து வளர்க்
கிறோம். இப்படி மனிதருக்குப் பிறந்தது முதல் மோக்ஷத்திற்
குப் போகிறவரை உதவிபுரிந்து வருகிற நம்மை அவர்களும்
பிள்ளைபோல் வளர்த்துக் காப்பாற்றாமல் வெட்டிக்கொல்வதென்
றால் பொறுக்கமுடியாத வருத்தமாயிராதா? நான் சுப்பிரமணி
யக்கடவுளை விட்டுப் பிரிந்ததே கிடையாது. அங்கே பல பக்த
ரைப்பற்றி உளவாளிகள் பலர் வந்து சுவாமியிடத்தில் பின்வரு
மாறு சொன்னார்கள்: "மகாபக்தர்கள், இரவுபகலாகக் கோயிலே
குடியாக இருக்கிறார்கள்; தொண்டு புரிகிறார்கள்; பெரும் படிப்
பாளிகள்; பிரசங்கஞ் செய்கிறார்கள்; வருஷமொருமுறை கங்கை

யில் தீர்த்தமாடுகிறார்கள்; கோடி கோடியான பொருளை வாரி வாரித் தருமஞ்செய்கிறார்கள். நாளையோடு அவர்களுக்குப் பூமி வாழ்க்கை முடிகிறது'' என்றார்கள். அப்படியே மறுநாள் அவர்கள் புறப்பட்டு எங்கள் ஷண்முகபுரத்திற்கு வந்தார்கள். நமது நாயகர் சுப்பிரமணியக் கடவுள் "அப்பா! இவர்கள் பக்தர்கள் தான் சந்தேகமில்லை; ஆனால் என்னுடைய அடியார்களாகிய ஆடப்பர் கோழியப்பரின் வமிசத்தை முட்டைவரை கருவறுத்திருக்கிறார்கள். ஆகலால் எனக்குமட்டும் செய்த பக்தியைப் பொருட்படுத்த முடியாது; நான் அடியார்க்கடியனாதலால் எனது அடியார்களுடைய மனதைப் புண்படுத்துபவர்களை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்; ஆனால் அவர்கள் உண்மையான பக்திசெய்திருப்பதால் அவர்களை யமலோகமாகிய நரகலோகத்துக் கனுப்பாமல் திரும்பவும் மறுபிறப்புக் கொடுத்துப் பூலோகத்துக் கனுப்பிவிடுங்கள்'' என்று திருவாய்மலர்ந்து அனுப்பிவிட்டார்கள். நமக்கு அங்கே செல்வாக்கில்லாமற் போகவில்லை. அதை இங்குள்ள நமது மனித சகோதரர்களில் சிலர்மட்டும் தெரிந்து கொள்ளவில்லை. நம்முடைய நன்மையையும் அவர்களுடைய நன்மையையும் கருதியே இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறேன். முழுமனதோடு ஆதரிக்க வேண்டுகிறேன் என்று பேசினார். தீர்மானம் ஏகமனதோடு அங்கீகரிக்கப் பெற்றது.

(காரைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் துண்டுப் பிரசுரம்.)

(இன்னும் வரும்.)

## தமிழ்.

(98-ம் பக்கத் தொடர்ச்சி.)

தமிழின் பொருள்:—தென்தேயத்தின்கண் இம்மொழி வழங்கலாற் றென்மொழியெனவும், திராவிடர்கள் ஆண்டுவந்தமையால் திராவிடம் எனவும் பெயர்பெறும். திரமிடன் என்னும் அரசன் தெக்கணத்தை ஆண்டுவந்தமையின் திராவிடம் எனலாயிற்று என்பர் ஆரிய நூலார். தமிழ் என்னும் பதத்திற்குத், "தமிழென்பதினிமை நீர்மை'' எனப் பதினோராவது நிகண்டு கூறுதலால், இனிமை, இன்பம், குணம் எனப் பொருள்படும்.

தமிழ் வந்தவாறு:-இது அநாதிகாலந்தொட்டு உளதாயினும், நம்மறிவுக் கெட்டியவரையில் காலவரை யறையைக்கூறும். இம் மொழியானது, சிவபெருமானால் அகத்தியருக் குபதேசிக்கப் பட்டது. இதனை,

"வடமொழியை பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்தும்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்று பாகரெனில்
கடல்வரைப்பி னிதன்பெருமை யாவரே கணித்தறிவார்."

என்று சிவஞானமுனிவர் கூறிப்போந்தனர். இவ்வகத்தியர், சிவபெருமான் மணவினை காலத்து வடதிசை உயரவும், தென் றிசைதாழவும் நேர்ந்தகாலை, சிவபெருமானால் இம்மொழி உப தேசிக்கப்பட்டு, தென்றிசைக்கட் போந்தனர் என்று காஞ்சிபுரா ணத்து தழுவக்குழைந்த படலத்தால் அறியப்படுகின்றது. அகத் தியர் காலத்தை வரையிடுதல் கூடாதாயினும் ஒருவாறு அறி வுக்கு எட்டியவரையில் நிச்சயிப்பாம்.

வான்மீகி இராமாயணத்தே ஸ்ரீராமன் வனவாசஞ் செய்த பொழுது ஆங்கிருந்த அகத்தியனா ராசிரமத்திற்றங்கி அவராசி களைப் பெற்றேகினர் என்று கூறிய சந்தர்ப்பத்தில், "அகஸ்த்ய இதிவிக்யாதோ, லோகேசுவே கைவகர்மணா" என்று, குடில மாகிய அகத்தை நீக்கிய பெரியமுனியாகிய அகத்தியனை ராமன் தொழுதேகினன் என்றனர். ஆனால் இதுபோழ்து என்போன் றார்கட்கு ஓர் ஐயம் நிகழலாம். என்னையெனின் அக்காலத்தே நம்மாசிரியர் அகத்தியனார் தென்றிசைக்கட்போந்திருந்தனரோ? என்பதாகும். ஆனால் அதற்கு முன்னரே தென்றிசையில் பொதியமலையினிடத்திருந்துகொண்டு தமிழ்மொழியை விருத்தி செய்துவிட்டனர் என்பதற்குறிய உதாரணத்தினை கீழ்காட்டு கின்றேன்.

"மன்மருங்கறுத்த மழுவாணெடியோன்
றன்முன்றோன்ற றகாதொழி நீயெனக்
கன்னியேவலிற் காந்தமன்ன
னின்னகர்காப்போர் யாரெனநினைஇ

நாவலந்தண்பொழி நண்ணூர்நடுக்குறல்
காவற்கணிகை தனக்காங்காதல்
நீகழ்ந்தோர்க்காயினு மெஞ்சுதலில்லோன்
ககந்தனுமெனக் காதலிற்கூஉ
யரசாளுரிமை நின்பாலின்மையிற்
பரசுராமனின் பால்வந்தணுகா
னமாமுனிவ னகத்தியன்றனது
துயர்நீங்கு கிளவியின்யான்றோன்றளவுங்
ககந்தன் காத்தல் ... ... ... ..."

(மணிமேகலை சிறைச்செய்காதை 25 முதல்)

"செங்கதிர்ச்செல்வன் றிருக்குலம்விளங்குங்
கஞ்சவேட்கையிற் காந்தமன்வேண்ட
வவாமுனிவ னகத்தியன்றனது
காகங்கவிழ்த்த காவிரிப்பாவை" (பதிகம் 9 அடிமுதல்)

(இன்னும் வரும்)

R. S. சாம்பசிவ சர்மன். (தமிழ்ப் பண்டிதன்)

---

## வருணதரும விளக்கம்.

(65-ம் பக்கத் தொடர்ச்சி.)

தாவரங்கள் ஒருயிர்ப்பிராணி; சிப்பி முதலியவை ஈருயிர்ப் பிராணி; எறும்பு முதலியவை மூவுயிர்ப்பிராணி; வண்டு முதலியவை நான்குயிர்ப்பிராணி; பட்சி, மிருகங்கள் ஐந்துயிர்ப் பிராணி; மனிதன் ஆருயிர்ப்பிராணி; திரிகால வர்த்தமானிகளான தேவர்கள் ஏழுயிர்ப்பிராணி. ஒருயிர்ப்பிராணியைக் கொல்லும் தோஷத்தைவிட ஈருயிர்ப்பிராணியைக் கொல்லும் தோஷம் அதிகம். ஈருயிர்ப்பிராணியைக் கொல்லும் தோஷத்தைவிட மூவுயிர்ப்பிராணியைக் கொல்லும் தோஷம் அதிகமாகும். இம் மாதிரியே ஐந்துயிர்ப் பிராணியைக் கொல்லும் தோஷத்தைவிட ஆருயிர்ப்பிராணியைக் கொல்லும் தோஷம் பெரிது. பிராம் மணர்கள் சைவர்கள் ஒருயிர்ப் பிராணியாகிய தாவரங்களை புசிக் கின்றார்கள். அக்குற்றம் அற்பமாகும். சூத்திர சாதியாரும் நீசர்களும் மாமிசம்புசிக்கின்றார்கள். ஐந்துயிர்ப் பிராணியாகிய

பக்ஷி மிருகங்களைப் புசிப்பது பெருங்குற்றமேயாம். ஆகையினல் மாமிசம்புசிக்காத சாதியாரே மேலான சாதியார்.

கொல்லாவிரதமே எல்லாவிரதமாகக்கொண்ட சீவகாருண்ய வொழுக்கமுடையவர்களாகிய உத்தமர்கள் எந்தச் சாதியாராயினும் எந்தச் சமயத்தாராயினும் எந்தச்செய்கை உடையவர்களாயினும் தேவர், முனிவர், சித்தர், யோகர் முதலிய யாவராலும் வணங்கத்தக்க சிறப்புடையராவார்.

இராமலிங்க வள்ளல்.

உயிர்க்கொலையும் புலைப்பொசிப்பு முடையவர்களெல்லா
முறவினத்தா ரல்லரவர் புறவினத்தாரவர்க்குப்
பயிர்ப்புறுமோர் பசிதவிர்த்தல் மாத்திரமேபுரிக
பரிந்துமற்றைப் பண்புரையேல் நண்புதவேலிங்கே.

கொலைபுரிவார்தவிரமற்றை யெல்லாருநினது குலத்தாரே
நீயெனதுகுலத்து முதன்மகனே.

வேதாந்த ஸாகரத்தை தமது அறிவென்னும் புணைகொண்டு கடந்த ஸ்ரீலஸ்ரீ கருணையானந்த வள்ளற்பெருமான் அவர்களும் மொழிக்குமொழி தித்திக்கும் தமது வேதாந்த பாஸ்கரனில் சீவகாருண்யம் என்னும் அத்தியாயத்தில் "வம்ச பரம்பரையாக ஆடு கோழிகளைத் தின்றுவருபவர்களில் ஒருவன் கல்வி, கேள்வி சாதுசங்கச் சார்பு முதலிய நல்லொழுக்கத்தால் பிராணிகள்மீது கிருபை வைப்பானேயாகில், அவன் எந்தச்சாதியாக யிருந்தாலும் அவனே சீவகாருண்யமுடைய மஹானவான்.

பிரபுலிங்கலீலை.

தன்னைக் கொல்லினுந் தான்பிறி தொன்றினைக் கோறல்
பன்னிற் பாவமென் றறைகுவர் கற்றுணர் பழையோர்.

ஆகையால் சகல உயிர்கள் மீதும் கருணை பாவிப்பவனெவனோ? அவனே! அந்தணனென்னும் வாக்கியத்திற்கு இலக்கானவன். இதை விட்டுவிட்டுப் பார்ப்பார்களே அந்தணர்கள், மற்றவர்கள் அந்தணரல்லவென்று கருதுவது சரியாகுமா?" எனத் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றனர்.

(இன்னும் வரும்) விமல் சேஷாத்திரி.

புலிவலம் ஸ்ரீ தெண்டாயுதபாணிக் கடவுள்மீது
மணிமுத்துநாயகம் என்னும் காரணப்பெயர் புனைந்த
ஞானபூபதி, ஸ்ரீ கருணையானந்த சுவாமிகள்
திருவாய்மலர்ந்தருளிய
திருப்பாவணி என்னும்

# கந்தப்புகழ்.

இதில் நவீன நாகரீக பார்ஸி வர்னமெட்டுகளமைந்த இராக தாளங்களுடன் பரமானந்தத்தைத் தரும் கீர்த்தனங்கள், தேகப் பரவசஞ்செய்யும் பல்லவிகள், கல்மனமும் கரைந்துருகக்கூடிய அநு பல்லவிகள், பக்திரசக்கடலைப்புகட்டி ஆனந்தபாஷ்பம் சொரியச்செய் யும் சரணங்கள், கெம்பீரமும் சோகரசமும் பொருந்திய ஜாவளிகள், சொற்சுவை பொருட்சுவை நிறைந்து ததும்பி வாசிப்போர் உள்ளத்தை கொள்ளைகொண்டு என்ன வாக்கு! என்ன அருமை! என்று வியக்கும் படியான விருத்தங்கள் முதலியவை நிறைந்திருக்கின்றன. ஒவ்வொரு பாடலையும் பாடுபவரும் கேட்பவர்களும் திடுக்கிட்டு அதிசயித்து மயிர் கூச்சலடைந்து ஆஹா! ஆஹா!! பலே! பேஷ்! என்று சிரக்கம்பம் கரக்கம்பம் கொண்டு மெய்மறந்து பத்தி முத்தி அடையக் கூடிய விதமாக அமைந்துள்ளது.

| | |
|---|---|
| முதற்பாகம் அணா 0—2—0 | 2-ம்பாகம் அணா 0—2—0 |
| முருகர் தியானம் அணா 1. | வேதாந்தபாஸ்கரன் ரூ. 1. |

கருணாநிதி

## ஜீவகாந்த தீர்த்தம்.

இந்தத் தீர்த்தமானது சாதாரணமாய் ஆறு, குளம், ஏரி, கிணறு முதலியவைகளில் உள்ளதல்ல. நமது ஆன்றோர்கள் அனுபவித்து கையாண்டுவந்த முறைப்படி தை மாசி முதலான காலங்களில் பெய்யும் பனிநீரை பளிங்குப்பாத்திரங்களில் வாங்கி அதில் ஒரு மண்டலம்வரை மெஸ்மெரிஸ சக்தியால் ஜீவகாந்தப் பவரைச் செலுத்தி ஜுரம், வயிற்றுவலி முதலிய எல்லாவியாதிகட்கும் பரமசஞ்சீவியாகத் தயாரிக்கப்பெற்றுள்ளது. வியாதிக்குத்தக்கபடி அவ்வப்போது மெஸ் மெரிசம் செய்து அனுப்பப்பெறும். பாலர் முதல் விருத்தர் வரையில் உபயோகிக்கலாம். எவ்வித பத்தியமும் கிடையாது. ஜீவகாருண் யத்தை முன்னிட்டே குறைந்த விலை ஏற்படுத்தலாயிற்று.

2 அவுன்சுபாட்டில் 1-க்கு 0—8—0
டஜன் ஒன்றுக்கு 5—0—0
காலரா மாத்திரை பாட்டில் 1-க்கு 0—3—0

விலாசம்:—

மானேஜர்,
கருணாநிதி வர்த்தக சாலை,
ஞானசூரியன் ஆபீஸ்,
விஜயபுரம், திருவாரூர். S. I. Ry.

# ஜனங்களே! இன்னுமா தூங்குகிறீர்கள்?

## வேதாந்த பாஸ்கரன்

### என்னும் நமது மெய்ஞ்ஞான சூரியன் உதயமான பின்னரும் தூங்குவது ஞாயமா! ஞாயமா!!

அஞ்ஞான நித்திரை நீங்கி! மெய்ஞ்ஞான விழிப்படையுங்கள்!!

இவ்வுலகின்கண் ஆத்மலாபம் அடைய அனேக பக்குவிகள் எண்ணியும் (தூணைக் கட்டிப்பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்குதே! விடமாட்டேனென்குதே!! என ஓலமிடுபவரைப்போல்) பிரபஞ்சவாழ்க்கையில் அதிகமாக மனதை நுழைத்துக்கொண்டு ஐயோ! பிர்பஞ்சம் விடமாட்டேனென்குதே? என்று வருந்துகின்றனர். தூணை நாம் பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்கிறோமா? தூண் நம்மைப் பிடித்துக்கொண்டு விடமாட்டேன் என்கிறதா? என்றறிந்தவர் சிலரே. ஆதலின் காட்டிலிருப்பினும் நாட்டிலிருப்பினும் கமல நீர்போல் பற்றற்றிருக்க வேண்டுமேயன்றி, மலை, குகை, முதலானவைகளில் வசிக்கவேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை

மரணமாவதோ இன்ன நேரமென்று காணுவது அசாத்தியமாயிருக்கிறது. அறுப்பதற்கு கத்தி தீட்டுகிறபோதும் ஆடு அசைபோடுவதுபோல் காலமெல்லாம் கதை, காவியம், பகடி, பரிகாசவேடிக்கை விளையாட்டுகளில் பொழுதைப் போக்கிவிட்டு சாகப்போகிறகாலத்தில் சங்கரா! சங்கரா!! என்று பிதற்றுவதிற் பயனில்லை என்பதை ஆலோசித்து ஆத்மலாபம் பெற முயலுங்கள்.

தேனீவண்டானது தானும் தேனையுண்ணாமல் தேனை எடுக்க வருபவரையுங் கொட்டுகிற தன்மைபோல் இவ்வுலக வாழ்வையே சதமென நினைந்து, நீங்கள் ஆத்மலாபம்பெற முயலாவிடினும் முயற்சிப்பவர்களை தடுக்காதிருங்கள். ஆத்மானுசந்தானம் பெறுவதற்கு அருமை பெருமைவாய்ந்த நமது வேதாந்த பாஸ்கரன் ஓர் சிறந்த வழிகாட்டியாகும். ஏனெனில் சிவர் எழுதிய சாடு முரடான வசன நடைகளைப்போலின்றி நளினமான இனிய செந்தமிழ் வசன நடையில் பன்னூற்களிலிருந்தும், மேற்கோள் தீட்டி மிக அழகாயும், சமரசமாயும் எழுதப்பெற்றிருப்பதால் முஹம்மதியர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் முதலிய எல்லாமதஸ்தர்களும் வாங்கி வாசிக்கற்பாலதே. இந்நூலை வாசிக்காதவர்கள் வாஸ்தவத்தில் துர்ப்பாக்கியர்களே! தமிழ்க்கல்வி குன்றிய இக்காலத்தில் இத்தகைய நூல் வெளி வந்துலாவுவதானது தமிழ் நாட்டுக்கு எதிர்பாராத ஓர் பெரிய அதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும்.

வேதாந்த பாஸ்கரன் விலை ரூ 1—0—0
யோக ரகசியம் (ஒருபாகம்) விலை அணா 0—6—0

விலாசம்:—மானேஜர், கருணாநிதி வர்த்தகசாலை, ஞானசூரியன் ஆபீஸ்,
விஜயபுரம்—திருவாரூர். S. I. Ry.

PRINTED AND PUBLISHED BY SWAMI KARUNAIYANANDA
at the KARUNANITHI PRESS, VIJAYAPURAM.